1980 ஜூலை 5] [திரு. சு. முத்துசாமி]

சிலை சென்று அதற்குப் பின்பு அமைச்சர்களைப் பார்கக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வசதி செய்யவேண்டுமென்ற வகையில் கிரீன்வேஸ் ரோடுவரை விடப்பட்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனியாக விட்ட பேருந்து அல்ல, பொதுவாக விட்ட பேருந்து. வருகிற நண்பர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அது வருஷம் பூராவும் ஓடிக்கொண்டிருக்கும் பேருந்து. எனவே, அதைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். தேவை என்றால் இன்னும் அதிக வசதி செய்து கொடுக்க நிச்சயமாகத் தயாராக இருக்கிறோம். உறுப்பினர்களுக்கு மட்டும் என்று ஓடுகிற ஒதுக்கப்படுகிற பஸ்களை அவர்களே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மற்றப்படி சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்க வருகிறவர்களை அவர்களுக்கான இடத்தில் அமரச் செய்தால் நிச்சயமாக ஒத்துழைப்பு கொடுத்ததாக ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதியிலிருந்து வருகிறவர்களை உறுப்பினர்கள் தங்களுடன் பேருந்தில் அழைத்துக் கொண்டு வந்தாலும், பேரவைக்குள் அவர்களை அழைத்துக் கொண்டு வராமல் இருந்தால் சரி.

4. தகவல் கோரல்.

(அ) உர விலை உயர்வைத் தடுத்தல்.

திரு. ரா. கிருஷ்ணன்: ஏற்கெனவே பெட்ரோலியம் பிராடக்ட்ஸ் விலை ஏற்றத்தின் காரணமாக உரவிலை ஏறியிருக்கிறது. இந்தச் சபையின் மூலமாக பழைய விலையிலேயே உரத்தைக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தி ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அத்தகைய தீர்மானத்திற்கு அறிவிப்பு கொடுக்கலாம். அப்பொருள் குறித்து நிதிநிலை அறிக்கை பொது விவாதத்திலும் பேசலாம்.

திரு. ரா. கிருஷ்ணன்: விவசாயத் துறை அமைச்சர் மூலமாகத் தீர்மானம் வந்தால் சிறப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த பிரச்சினையை எழுப்ப வேண்டிய நேரம் இதுவல்ல.

(ஆ) உறுப்பினரது கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு.

திரு. து. புருஷோத்தமன்: நான் 54—வது விதியின் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். இதுவரை சபையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தள்ளுபடி செய்யப் பெற்றிருந்தால் அதுபற்றி தகவல் உங்களுக்கு வரும்.

திரு. செ. இராமலிங்கம் : தஞ்சை மாவட்டம் தமிழ் நாட்டின் நெற் களஞ்சியம் என்று சொல்வார்கள். குறுவை சாகுபடி ஆரம்பித்திருக்கிறது. அரசாங்க விதைப் பண்ணைகளிலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து இதுபோல் தினசரி என்ன வாயிற்று என்று பேரவையில் கேட்டுக்கொண்டிருக்கக்கூடாது.

4. அரசினர் சட்ட முன்வடிவு.

(அ) நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(5) 1980–81-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்—விவாதம் தொடர்ச்சி.

*திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் வரவுசெலவுத் திட்டத்தின்மீது பேசுகின்ற தகுதியினை வழங்கிய மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களுக்கும் நான் சார்ந்திருக்கிற பூங்கா நகர் தொகுதி மக்களுக்கும் என் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரவுசெலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த நிதியமைச்சர் அவர்கள்,

'' இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு ''

என்ற திருக்குறளோடு இங்கே சமர்ப்பித்தார்கள். அதைப் போலவே,